**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண்.158/2022**

இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் கிழமை 16ம் நாள் இன்று இந்த **வா.சா.1** ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.சுபஸ்ரீ L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கந்தசாமி |
| தந்தை/ கணவர் பெயர் | : | |
| வயது | : | |
| கிராமம் | : | |
| ஊர் | : | |

---

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 77 of 1969) on the 16.12.2024**

**<u>1ம் பிரதிவாதி அவராகவே முன்னிலையாகி அவரது தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

8. நான் சொல்லும்அரசு சொத்தில் அரசால் சிமெண்ட் காரை போடப்பட்டதாக சொல்லியுள்ளதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை ஆனால் பஞ்சாயத்தில் அது சம்மந்தமாக தீர்மானம் போடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தீர்மானத்தின் தேதியை குறிப்பிட முடியுமா என்றால் தற்போது சொல்ல முடியாது. ஒப்பந்ததாரர் யார் என்று சொல்ல முடியுமா என்றால் அதை அரசாங்கம் செய்துள்ளது. டெண்டர் எவ்வளவு தொகைக்கு விடப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. 2022ம் வருடம் ஜனவரி மாதம் முதல் நிரந்தரமாக பிரதிவாதிகள் கார்ரை வருவதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான்.

9. அது என்னுடைய இடம் என்பதால் 2021ம் ஆண்டு முதலும், அதற்கு முன்பு கடந்த 22 வருடங்களாக என்னுடைய இடத்தில் எனது காரை நிறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அந்த வாகனத்தை தினமும் பகலில் ஓட்டிச்சென்று இரவில் நிறுத்தி

வருகிறேன் என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் அந்த வாகனத்தை தொடர்ந்து இரவு பகல் நேரங்களில் நிறுத்தியுள்ளார்கள். 24 மணி நேரமும் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக அந்த வாகனம் அங்கு நிற்கிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் Ford Feista TN 39 AR 0039 என்ற கார் எவ்வளவு துாரம் 12 ஆண்டுகளாக ஓடப்பட்டுள்ளது என்ற விபரம் அடங்கிய பட்டியல் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

10. நான் கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்த புகாரை நான் இவ்வழக்கில் எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எத்தனாவது ஆவணம் என்று எனக்கு தெரியாது. 1918ம் ஆண்டு ஆவணத்தில் இது பொது சொத்தாக உள்ளதாக நான் சொல்வதை அந்த ஆவணத்தில் எந்த இடத்தில் உள்ளது என்றால் 3 வது பக்கத்தில் உள்ளது நான் சொல்வது 3 வது பக்கத்தில் இல்லை என்றும் உண்மையாக 3 வது பக்கத்தில் செ.கருப்பகவுண்டர் வீட்டிற்கு போகும் 4 முழ தடத்திற்கு கிழக்கு என்று உள்ளது என்றும் அது பொது தடம் என்று இல்லை என்றால் சரியல்ல. பத்திரத்தில் 4 முழ பொதுத்தடத்திற்கு கிழக்கு என்று தான் உள்ளது.

11. எனது கிரையப்பத்திரம் வா.சா.ஆ.6 ல் செக்குபந்தியில் நாச்சிமுத்துக்கவுண்டர் தடம் என்பதை மறைத்து 4 முழம் தடம் என்று மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பத்திரத்தில் சரியாகத்தான் குறிப்பிட்டுள்ளேன். நான் எனது முல ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முல ஆவணத்தில் நாச்சிமுத்துக்கவுண்டரின் தடத்திற்கு கிழக்கே என்று தான் உள்ளது என்றும் அதனால் தான் நான் அந்த ஆவணத்தில் வழக்கு விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் தாக்கல் செய்திருந்தால் எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. வழக்கு தாக்கல் செய்தபோது தாக்கல் செய்துள்ளேன்.

12. 1ம் வாதியின் 2017 ம் ஆண்டு கிரையப்பத்திரத்தில் அவருடைய சொத்து விபரத்தில் 6 வது பக்கத்தில் நாச்சிமுத்துக்கவுண்டரின் தடத்திற்கே மேற்கே அவரது சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நாச்சிமுத்துக்கவுண்டரின் வீட்டிற்கு செல்வதற்காக அவ்வாறு அவரது பெயரை குறிப்பிட்டு அந்த தடத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அவர்களுக்கு அந்த தடத்தில் உரிமை இல்லை. நான் சொல்வது போல் உரிமை இல்லை என்றால் நாச்சிமுத்துக்கவுண்டரின் சொத்திற்கு செல்லும் பொதுத்தடத்திற்கு மேற்கே என்று குறிப்பிட்டிருப்பார்கள் என்றும் உரிமை உள்ளதால் தான் நாச்சிமுத்துக்கவுண்டரின் இடத்திற்கு மேற்கே என்று குறிப்பிட்டுள்ளது என்றால் பொது தடம் என்பதால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

13. எனது கிரைய ஆவணத்திலும் பிரதிவாதிகளின் கிரைய ஆவணத்திலும் பொதுத்தடம் என்று எங்குஉள்ளது என்றால் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை கண்டுபிடித்ததால் இவ்வழக்கை நான் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி ஆகிய நான் ஆக்கிரமிப்பு செய்ததாக வட்டாட்சியரிடம் 1 ம் பிரதிவாதியாகிய நான் புகார் கொடுத்த காரணத்தால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி கதிர்வேல் தாவா தடத்தின் மீது வீடு கட்டியதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல நான் அவ்வாறு சொல்லவில்லை.

14. க.ச.736/9 ல் கார் நிற்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் க.ச.736/8ல் தான் நான் சொல்லும் கார் நிற்கிறது என்றால் க.ச.739/9 மற்றும் க.ச.736/8 இரண்டும் ஒட்டியது போல் உள்ளது. நான் தாவாவில் 12 அடி தடம் என்று குறிப்பிட்டுள்ளேன் முன்புறம் 12 அடி பின்புறம் 6 அடியாக உள்ளது. அவ்வாறு 6 அடி என்று நான் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் தாவா தடம் 5-6 அடி என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால்

அது தவறாக குறிப்பிட்டுள்ளார். நானும். 1ம் வாதியும் சேர்ந்து எனது தாத்தா காலத்தில் கட்டப்பட்ட சுவரை 2021ம் ஆண்டு அகற்றி விட்டு அதை பொது வழித்தடமாக செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15. அவ்வாறு சுவரை இடித்து பொதுத்தடமாக செய்து விட்டு எனது வீட்டிற்கு வடக்கு பார்த்தார் போல் கதவை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆணையாளர் வரைபடத்தில் எனக்கு தார்ஸ் வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தற்போது தான் தார்ஸ் வீடு கட்டியுள்ளேன் ஆனால் நான் ஓட்டுவீடு உள்ளதாக வழக்காடியுள்ளேன் என்றால் 1918 முதல் ஓட்டு வீடாக உள்ளது அதில் பாதியை தார்ஸ் வீடாக கட்டியுள்ளேன். 1918ம் ஆண்டு ஏற்பட்ட எனது மூலப்பத்திரத்தில் காலியிடத்தை தான் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1918ம் ஆண்டு கிரையப்பத்திரத்தில் சென்னிமலைக்கவுண்டருக்கு தான் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதே தவிர எனது தாத்தாவிற்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சென்னிமலைக்கவுண்டரின் பேத்தியிடமிருந்து எனது அப்பா கிரையம் வாங்கியுள்ளார். எனது அப்பா கிரையம் வாங்கும்போது தான் இந்த தடத்தை நாச்சிமுத்துக்கவுண்டர் தடத்திற்கும் கிழக்கு என்று குறிப்பிட்டு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல அவ்வாறு குறிப்பிடவில்லை.

16. எனது அப்பா அந்த சொத்தை கிரையம் வாங்கும்போது அது காலியிடமாகத்தான் இருந்துள்ளதுஎன்றால் சரியல்ல அதை மறைப்பதற்காகத்தான் மூல ஆவணம் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்ததாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 8ம் பக்கத்தில் மேற்படி சொத்தில் மேல்புறம் உள்ள கிழமேல் தடத்தில் இட்டேறி வரை 1ம் வாதியும் சுக்கிரசெட்டியார், கந்தசாமிசெட்டியார் ஆகியோர் நடந்து கொள்ள பாத்தியம் சகிதம் என்று குறிப்பிட்டு 1ம் வாதியின் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் பத்திரம் முத்தனசெட்டியாரின் வாரிசுகள் அனைவரும் அவர்களுக்குள் முடிவு கொண்ட பத்திரம் அதனை எனக்கு சாதகமாக நான் பயன்படுத்துகிறேன். முத்தனசெட்டியாரின் வாரிசுகள் பற்றிய ஆவணத்தை நான்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரத்தில் உள்ளது.

**17. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1ம் வாதிக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட நத்தம் பட்டா என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1992ம் ஆண்டிற்கு முன்பு 1ம் வாதி அங்கு வாழ்ந்ததாக நான் சொல்வதற்கு ஆவணம் என்றால் 1ம் வாதியின் சகோதரி தான் அந்த இடத்தை தான் வாங்கியுள்ளார். சகோதரியின் பெயர் சுந்தராம்பாள் சுந்தராம்பாளின் கணவர் சின்னச்சாமி அந்த சொத்தை வாங்கியுள்ளார். சின்னச்சாமியின் மகன்கள் கதிர்வேல் மற்றும் தங்கராஜ் கிரையம் வாங்கினார்கள். அப்படி என்றால் சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.1837 ஐ நான் இவ்வழககில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா மாறுதலுக்காக கொடுத்துள்ளேன் பாககறாருக்காக நான் பட்டாவை கொடுக்கவில்லை. நான் வழக்குரை தாக்கல் செய்தபோது 3 வது ஆவணமாக பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் புதிய பட்டா கிடைக்காததால் பழைய பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். பழைய பட்டாவை தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

18. எனது சகோதரருக்கு 60 சதுர மீட்டர் மட்டும் தான் இடம் கண்டுள்ளது என்றும் எனது ஆவணத்தில் 114.08 சதுர மீட்டருக்கு ஆவணம் செய்துள்ளதால் தான் பட்டா மறுக்கப்பட்டுள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் பட்டா கொடுக்கப்படவில்லை. 14.10.2009 ல் 1ம் வாதி மற்றும் அவரது சகோதரர் பெயருக்கு பட்டா எண்.1837 வழங்கப்பட்டதாக எனது வழக்குரையில் ஆவணங்களின் பட்டியலில் குறிப்பிட்டு விட்டு தற்போது தான் பட்டாவிற்கு விண்ணப்பம் செய்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me/before me in open Court interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd.Tmt.A.Subashri LLM
Additional District Munsif,
Tiruppur.